# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 7700 / 2012 / எம்சி. 8 நாள் : 23 .07.2012</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.07.2012 திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல் /

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜூலை 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள் | |
| 1 | பொது சுகாதாரம் - கோவை தெற்கு வட்டத்தில் இருந்து உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குதல் - மாமன்ற அனுமதி வழங்குதல் - தொடர்பாக. | 2 |
| 2 | பொறியியல் பிரிவு – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகள் மையக்கட்டிடங்கள் பழுது பார்க்கும் பணிகளை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. | 2 |
| 3 | கல்விப் பிரிவு - மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல் - மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 3 |
| 4 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் - ஏற்கனவே உள்ள மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுடன் கூடுதலாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர் - நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. | 3 |
| 5 | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.37 - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.398, 399/1 மற்றும் காளப்பட்டி கிராமம் க.ச.எண்.364/2 சி, 365/1 மற்றும் 365/2 புல எண்களில் 8.44 ஏக்கர் பரப்பளவு பூமிதான போர்டு பூமியினையும், தனியாருக்கு சொந்தமான விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.399/2 பகுதியில் 2 ஏக்கர் 73 சென்ட் நிலத்தினையும் இணைத்து ஆக மொத்தம் 11.17 ஏக்கர் பரப்பளவில் உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு, 8.44 ஏக்கர் பூமிதான போர்டு பூமியினை கோயம்புத்தூர் மாநகராட்சியின் பெயருக்கு நில உரிமம் மாற்றம் செய்யவும், விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண். 399/2-ல் 2.73 ஏக்கர் நிலப்பரப்பினை தனியாரிடம் நில ஆர்ஜிதம் செய்தும் 11.17 ஏக்கர் பரப்பளவில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கும் நோக்கத்திற்காக அனுமதி கோரி அரசிற்கு பிரேரணை சமர்ப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. | 4 |
| 6 | நகரமைப்பு பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண்.79 (பழைய வார்டு எண்.52)-ல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.17-ல் 60 அடி அகல திட்டச் சாலை உத்தேசத்திற்கு 6 சென்ட் இடம் தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்ய நில இழப்பீட்டு தொகை வழங்கி கையகப்படுத்தி திட்ட சாலை அமைத்தல் - மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 5 |
| 7 | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண்.37 – விளாங்குறிச்சி கிராமம், விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8, 60 அடி அகல திட்டச்சாலை BB மறு வரையறை உத்தேசம் - கொடிசியா திட்டச்சாலை XX 60 அடி அகலம் மற்றும் 80 அடி அகல A1A1 (Vilankurichi DD Plan – 8) திட்டச்சாலை இணைத்தல் - உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அணுகு சாலை உருவாக்கம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பாக | 5 |
| 8 | பொது சுகாதாரம் - சிறப்பு துாய்மைக்குழு – 30 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்துதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்று அனுமதி வழங்கப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதலர் - தொடர்பாக | 7 |
| 9 | பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மைய வளாகத்தில் உள்ள விடுதிக்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல்- மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. | 7 |
| 10 | பொறியியல் பிரிவு - தி/ள்.ELCOT நிறுவனத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு 1.20 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது – பில்லூர் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கவும், ராமகிருஷ்ணாபுரத்திலுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள முதன்மை பிரதான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் வடிவமைத்து கொண்டு செல்லவும், அதற்கான பணிகளை மாநகராட்சியால் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 8 |

| | | |
|---|---|---|
| 11 | பொறியியல் பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின்(IUDM)கீழ் 2012-13ம் ஆண்டிற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் – நகராட்சி நிர்வாக ஆணையரக நிர்வாக அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி கோருதல்– தொடர்பாக | 9 |
| 12 | பொறியியல் பிரிவு - 100 வார்டுகளிலும் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான 75 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 11 |
| 13 | JnNURM – 8 நீர்நிலைகள் புனரமைத்தல் - ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டம் II ன் கீழ் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 12 |
| 14 | கல்வி பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி கல்விப்பிரிவு பணியாளர்களுக்கு பணியிடங்கள் தரம் உயர்த்தப்பட்டு பதவி உயர்வு வழங்கக் கோரியது – அரசுக்கு அனுப்பி அனுமதி பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 13 |
| 15 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. கே. சந்திரிகா, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் நகர் நல மையம் – ஈரோடு மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 14 |
| 16 | பொறியியல் பிரிவு - தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான 75 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டுவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 15 |
| 17 | JnNURM – பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் II – வடகோவை-இராமநாதபுரம் - செட்டிபாளையம் சாலை – கழிவுநீர் குழாய் பதித்தல் - சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 15 |
| 18 | JnNURM – மழைநீர் வடிகால் கட்டும் பணி – முந்தைய 72 வார்டுகளில் ஏற்கனவே பணி நடைபெற்று வரும் 31 மண்டலங்கள் தவிர, மீதமுள்ள 81 மண்டலங்களில் சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் பணி (பகுதி–II) மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 16 |
| 19 | JnNURM – 5 இயற்கை வடிகால்கள் புனரமைத்தல் பணி - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 16 |

**நன்றியுரை**

**அ)** **<u>திருக்குறள்</u>**

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

**(குறள் - 647)**

**<u>விளக்கம்</u>**

தயக்கமும் அச்சமும் இன்றி, சொல்ல விரும்புவதைப் பிறர் உணரும்படிச் சொல்லும் வல்லமை உடையவர்களை, மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வெற்றி பெறுதல் மிக அரிது.

**திருவள்ளுவர்.**

---

**ஆ)** **<u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்புத் தீர்மானம் : 1</u>**

தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற இரவும் பகலும் அயராது உழைத்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநகராட்சி உள்பட அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகளையும் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபாட்டுடனும், உற்சாகத்துடனும் பங்குகொள்ள ஊக்கம் அளிக்கும் வகையில், சிறப்பாக செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளை தேர்ந்தெடுத்து கௌரவிக்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளதற்கு இதயமார்ந்த நன்றிகளை இம்மாமன்றம் காணிக்கையாக்குகிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 2</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தேவையான உள் கட்டமைப்பு வசதிகளான மேம்பாலம் கட்டுதல், இரயில்வே மேம்பாலம் கட்டுதல், குடிசை மாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டுதல் ஆகிய திட்டங்களுக்கு சிறப்பு நிதிகள் ஒதுக்கியும், மாநகரில் சாலை வசதிகள் மேம்படுத்த தனி நிதியாக ரூ. 52 கோடி ரூபாயை வழங்கியதோடு அல்லாமல் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இந்த வேளையில் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள நேரு உள் விளையாட்டு அரங்கில் விளையாட்டு வீரர்கள் இரவு, பகல் ஆகிய 2 நேரங்களிலும் பயன்படுத்திக்கொள்ள வசதியாக நான்கு உயர்மட்ட கோபுர மின் ஒளி கம்பங்கள் அமைக்கவும், மின் அமைப்பு வசதிகள் சீரமைக்கவும், இரண்டு 75 KVA புதிய ஜெனரேட்டர் பொருத்தவும் ரூ. 1.56 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 3</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு செயல்பாட்டிலுள்ள குடிநீர் திட்டங்கள் மூலமாக குடிநீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, மாநகராட்சியின் அனைத்து பகுதி மக்களுக்கும் 100 சதவிகித குடிநீர் வழங்கும் நிலையை ஏற்படுத்த பில்லூர் IIIம் குடிநீர் திட்டத்தை ஏற்படுத்தி நிறைவேற்றித்தர வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இம்மாமன்றம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 4</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி பில்லூர் குடிநீர் திட்டம் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. உரிய காலத்தில் மழை பெய்யாமல் பொய்த்து விடுவதால் சிறுவாணி குடிநீரை நம்பியுள்ள பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இவ்விதமான சூழ்நிலையை எதிர்கொள்ள பில்லூர் குடிநீர் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள இராமகிருஷ்ணாபுரம் குடிநீர் மேல்நிலைத் தொட்டியில் இருந்து பாரதி பூங்கா குடிநீர் தொட்டிக்கு நிரந்தரமாக குழாய் இணைப்பு ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று திட்டத்தை உடனடியாக துவக்க வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் திரு.எஸ்.பாலன், 62 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியப்பட்டு வடக்கு மண்டல தலைவர் திரு.ப.ராஜ்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 5</u>**

உலக வெப்பமயமாதலை தடுக்கவும், சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தவும் தமிழகம் முழுவதும் 64 இலட்சம் மரக்கன்றுகள் நட்டு தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்றும் மரம் வளர்க்கும் திட்டம் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கு இணங்க கோயம்புத்தூர் மாநகராட்சியில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

இதை ஊக்குவிக்கும் வகையில், இம்மாநகராட்சி சார்பில் நிரந்தரமாக மர நாற்றுப் பண்ணை (Nursery) ஆரம்பித்து அம்மரக்கன்றுகளை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கலாம் என்ற சிறப்புத் தீர்மானம் பணிகள் குழு தலைவா் திரு.கே.அர்ச்சுனன் அவர்களால் முன்மொழியப்பட்டு தெற்கு மண்டலத் தலைவா் திரு.எம்.பெருமாள்சாமி அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 6</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் துப்புரவு பணிகளில் பயன்படுத்தப்பட்ட மாடுகளை விற்பனை செய்யாமல் மாநகராட்சி மூலமாகவோ, தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வடக்கு மண்டல தலைவா் திரு.ப.ராஜ்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு 62வது வார்டு மாமன்ற உறுப்பினா் திரு.எஸ்.பாலன் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 7</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் வைக்கப்படுகின்ற விளம்பர பலகைகள், அதற்கான விதிமுறைகள் கடைபிடிக்காமல் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மாறாக வைக்கப்பட்டிருந்தால், அந்நிறுவனங்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை, கோவை மாவட்ட ஆட்சியா் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் 48வது வார்டு உறுப்பினா் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் முன்மொழியப்பட்டு பணிகள் குழு தலைவா் திரு கே. அர்ச்சுனன் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 8</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் துப்புரவு பணியாளர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண கடன், ஈமச் சடங்கு உதவித் தொகை ஆகியவற்றை உயர்த்தி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும். அவர்களுக்கு வெறைட்டி ஹால் ரோட்டில் 1000 வீடுகள் கட்டும் திட்டத்தை செயல்படுத்தியும், அவர்களுடைய வாரிசுகளுக்கு பணி நியமனங்கள் வழங்கியும் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் அதிக பொதுமக்கள் கூடும் இடமான மாநகராட்சி பிரதான அலுவலகத்திற்குள் துப்புரவுப் பணியாளர்களை ஒன்றுதிரட்டி, காவல்துறை தடுத்தும்கூட அதனையும்மீறி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதற்கு இம்மாமன்றம் கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

இது மிகவும் தவறான செயல். இனிவரும் காலங்களில் இதுபோன்ற ஆர்ப்பாட்டங்களை மாநகராட்சி பிரதான அலுவலகத்திற்குள் நடத்துபவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் திருமதி.எஸ்.மணிமேகலை, 23வது வார்டு மாமன்ற உறுப்பினா் அவர்களால் முன்மொழியப்பட்டு கிழக்கு மண்டலத் தலைவா் திரு.கே.ஆர்.ஜெயராம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

பொருள் :- உதவித் தொகை - கோவை தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது - தொடர்பாக.

*******

கோவை தெற்கு வட்டத்தில் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து 366 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும் இவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் வட்டாச்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம், கோவை (தெற்கு) அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் மேயர் மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு மற்றும் மாநகராட்சியால் பெறப்பட்ட 12 விண்ணப்பங்களை கோயம்புத்தூர் மாநகராட்சி சமுதாய அமைப்பாளர் மூலம் விசாரணை செய்ததில் 8 பயனாளிகள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்றும் முதியோர் உதவித்தொகை பெற தகுதியுடையவர் என கண்டறியப்பட்டுள்ளது. வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) மற்றும் சமுதாய அமைப்பாளர்களின் பரிந்துரையினையேற்று மொத்தம் 378 பயனாளிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றனர் :-

| | | |
|---|---|---|
| தகுதியுடையவர்கள் | : | 343 |
| தகுதியில்லாதவர்கள் | : | 32 |
| தவறான முகவரி | : | 02 |
| இரண்டு முறை பதியப்பட்டவை | : | 01 |
| மொத்தம் | : | 378 |

எனவே, வட்டாச்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் கோயம்புத்தூர் (தெற்கு) மற்றும் சமுதாய அமைப்பாளர்களின் பரிந்துரையினையேற்று மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய மொத்தம் 343 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். எண். 1748/2012/எம்.இ. 6.

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 146 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

பொருள் : கோவை மாநகராட்சி – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகள் மையக்கட்டிடங்கள் பழுது பார்க்கும் பணிகளை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் - சம்மந்தமாக.

********

கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி சத்துணவு மையங்களில் உள்ள கட்டிடங்கள் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். ந.க.எண்.35277/2011/இ3 நாள் 11.06.2012-ல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறிப்பு பெற்று மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சி வரவு செலவு திட்டம் 2012-2013-ம் ஆண்டிற்கு கல்வி நிதியில் 1.50 கோடி தொகை மாநகராட்சி சத்துணவு மையங்கள் மற்றும் கட்டிடங்கள் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகள் மையங்களில் பழுதுகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மாவட்ட ஆட்சியர்/ திட்ட அலுவலர் (ICDS), அலுவலகத்தில் குறிப்பு பெற்று மாநகராட்சி கல்வி நிதியில் சத்துணவு கட்டிடங்கள் பராமரிப்பு பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடி தொகையினை மாற்றி அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ளுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 10565/2011/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 147 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் - நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்க நிர்வாக அனுமதி கோருதல் - சார்பு -

பார்வை – கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண் 9 நாள் 16.07.2012

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ்

1. மேல்நிலைப்பள்ளிகள் - 16
2. உயர்நிலைப்பள்ளிகள் - 10
3. நடுநிலைப்பள்ளிகள் - 15
4. ஆரம்பப்பள்ளிகள் - 41
5. காது கேளாதோர் சிறப்புப் பள்ளி - 1

ஆகிய 83 பள்ளிகள் இயங்கி வருகின்றன. 20.06.2012 ம் நாளின்படி மொத்தம் 26550 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். மேற்கண்ட எண்ணிக்கையுள்ள மாணவ, மாணவிகளுக்கு 2012-13-ம் கல்வியாண்டில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.8,50,000/- ஆகும்.

எனவே, மாநகராட்சிப் பள்ளிகளில் 2012-2013-ம் கல்வியாண்டில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அடையாள அட்டை வழங்குதல் சார்ந்தும், அதற்குரிய செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்ற பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7161/2012/K6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 148 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்: பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் - ஏற்கனவே உள்ள மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுடன் கூடுதலாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர் நியமனம் செய்தல் -தொடர்பாக.

பார்வை: மாமன்ற தீர்மானம் எண்.2 நாள்: 27.04.2012.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளை கவனிக்க, பார்வையில் காண் மாமன்ற தீர்மானத்தின் வழியாக ஏற்கனவே திருவாளர்கள். ஆர்.சிவக்குமார், ஜே.சத்தியநாராயண பிரசாத், டி.கிருஷ்ணகுமார் மற்றும் கே.மகேஷ் ஆகிய வழக்கறிஞர்கள் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திரு. கே. நடராஜன், வழக்கறிஞர் தன்னை கோயம்புத்தூர் மாநகராட்சியின் சென்னை உயர்நீதி மன்றத்திற்கான நிலை வழக்கறிஞராக நியமனம் செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

எனவே திரு. கே. நடராஜன், வழக்கறிஞர், அவர்களை ஏற்கனவே உள்ள 4 மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுடன், கூடுதலாக மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்யவும், அவருக்கு மாமன்ற தீர்மானம் எண். 157 நாள் 29.12.2009-ன்படி மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 10439/2009/எம்.சி.10

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 149 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் :- கோயம்புத்தூா் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வாா்டு எண்.37 - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.398, 399/1 மற்றும் காளப்பட்டி கிராமம் க.ச.எண்.364/2 சி, 365/1 மற்றும் 365/2 புல எண்களில் 8.44 ஏக்கா் பரப்பளவு பூமிதான போா்டு பூமியினையும், தனியாருக்கு சொந்தமான விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.399/2 பகுதியில் 2 ஏக்கா் 73 சென்ட் நிலத்தினையும் இணைத்து ஆக மொத்தம் 11.17 ஏக்கா் பரப்பளவில் உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு, 8.44 ஏக்கா் பூமிதான போா்டு பூமியினை கோயம்புத்தூா் மாநகராட்சியின் பெயருக்கு நில உரிமம் மாற்றம் செய்யவும், விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண். 399/2-ல் 2.73 ஏக்கா் நிலப்பரப்பினை தனியாரிடம் நில ஆா்ஜிதம் செய்தும் 11.17 ஏக்கா் பரப்பளவில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கும் நோக்கத்திற்காக அனுமதி கோரி அரசிற்கு பிரேரணை சமா்ப்பித்தல் - தொடா்பாக.

-----

கோயம்புத்தூா் மாநகராட்சி, சத்தியமங்கலம் சாலையில், ஜி.பி தியேட்டா் அருகில் இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையம் சுமாா் 100 ஆம்னி பேருந்துகள் நகரிலிருந்து பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு செல்லும் வகையில் இயங்கி வருகிறது. இவ்வகை ஆம்னி பேருந்துகள் உள்ளிருந்து வெளியேறுவதும், வெளியிலிருந்து உள்ளே நிலை கொள்வதற்கும், நிறுத்தம் செய்வதாலும் மிகப் பெரிய அளவில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறுகள் விளைவிப்பதாக உள்ளது. தற்போது இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையத்தால் சத்தியமங்கலம் சாலை, டாக்டா் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பு பகுதியில் அமைந்திருப்பதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும், அருகில் உள்ள 100 அடி சாலை, சத்தி சாலை சந்திப்பில் உள்ள தானியங்கி போக்குவரத்து சிக்னல் மூலம் நெறிப்படுத்தினாலும் ஆம்னி பேருந்து நிலைய பேருந்துகளால் பெரிய அளவில் தடை ஏற்பட்டு முறையாக சிக்னல் பகுதியில் போக்குவரத்தினை முறைப்படுத்த முடிவதில்லை.

பொதுமக்களின் இடையூறுகளை களையும் வகையிலும், போக்குவரத்தை நிலைநிறுத்துவதற்கும் மாற்று ஏற்பாடாக புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள திட்டச்சாலை(BB)-யினையொட்டி கிழக்கு பகுதியில் அமைந்துள்ள வாா்டு எண்.37, விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.398, 399/1 மற்றும் காளப்பட்டி கிராமம் க.ச.எண்.364/2 சி, 365/1 மற்றும் 365/2 புல எண்களில் 8.44 ஏக்கா் பரப்பளவு பூமிதான போா்டு பூமியினையும் இதனுடன் தெற்கு பகுதியில் இணைந்து தனியாருக்கு சொந்தமான விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.399/2-ல் 2.73 ஏக்கா் நிலப்பரப்பினை நில ஆா்ஜிதம் செய்தும், ஆக மொத்தம் 11.17 ஏக்கா் பரப்பளவில் உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க ஏற்றதாக உள்ளது.

அவினாசி சாலையிலிருந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறுமின்றி அனைத்து ஆம்னி பேருந்துகளும் எளிதான வகையில் நகரினுள் வருவதற்கும், நகரிலிருந்து வெளியேறி பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு செல்வதற்கும் ஏற்றதாக உத்தேச 11.17 ஏக்கா் நிலம் அமையப் பெற்றுள்ளது.

பூமிதான போா்டிற்கு சொந்தமான 8.44 ஏக்கா் நிலப்பரப்பினை உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசிடமிருந்து கோயம்புத்தூா் மாநகராட்சி பெயருக்கு நில உரிமம் மாற்றம் செய்யவும், இதனுடன் 2.73 ஏக்கா் நிலப்பரப்பு விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.399/2-ல் தனியாருக்கு சொந்தமான நிலத்தினை மாநகராட்சி நிதியின் மூலம் நில ஆா்ஜிதம் செய்தும், மொத்தம் 11.17 ஏக்கா் பரப்பளவில் உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு உரிய பிரேரணை அரசின் அனுமதி பெறவேண்டி உள்ளது.

மேற்காண் பொருளில் கண்டுள்ள நிலப்பரப்புகளின் விபரம்.

| வ.எண். | கிராமம் | புல எண் | விஸ்தீா்ணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | விளாங்குறிச்சி | 398 | 1 ஏக்கா் 15 சென்ட் | பூமிதான போா்டு |
| 2. | விளாங்குறிச்சி | 399/1 | 1 ஏக்கா் 84 சென்ட் | பூமிதான போா்டு |
| 3. | காளப்பட்டி | 364/2C | 63 சென்ட் | பூமிதான போா்டு |
| 4. | காளப்பட்டி | 365/1 | 2 ஏக்கா் 61 சென்ட் | பூமிதான போா்டு |
| 5. | காளப்பட்டி | 365/2 | 2 ஏக்கா் 21 சென்ட் | பூமிதான போா்டு |
| | | | 8 ஏக்கா் 44 சென்ட் | பூமிதான போா்டு |
| | தனியாா் நில ஆா்ஜிதம் செய்யும் நிலபரப்பளவு | | | |
| 6. | விளாங்குறிச்சி கிராமம் | 399/2 | 2 ஏக்கா் 73 சென்ட் | கொடிசியா வளாகம். |
| | மொத்தம் | | 8.44+2.73=11.17 Ac | |

கோயம்புத்தூா் மாநகராட்சி, சத்தியமங்கலம் சாலை, ஜி.பி தியேட்டா் அருகில் தற்போது இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையத்தால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை களையும் வகையிலும், போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லாத வகையிலும், அவினாசி சாலையிலிருந்து கொடிசியா வளாகத்தின் வடபகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள திட்டச்சாலையின் (BB) கிழக்கில்

அமைந்துள்ள இடத்தில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க பூமிதான போர்டு இடம் 8.44 ஏக்கர் மாநகராட்சி பெயருக்கு நில உரிமம் மாற்றம் செய்யவும், மேலும் இதனுடன் இணைத்து 2.73 ஏக்கர் அளவில் விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.399/2 தனியார் பூமியினை நில ஆர்ஜிதம் செய்தும் ஆக மொத்தம் 11.17 ஏக்கர் அளவில் உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசின் அனுமதி கோரி உரிய பிரேரணை அனுப்ப மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8431/2012/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 150 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண்.79 (பழைய வார்டு எண்.52)-ல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.17-ல் 60 அடி அகல திட்டச் சாலை உத்தேசத்திற்கு 6 சென்ட் இடம் தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்ய நில இழப்பீட்டு தொகை வழங்கி கையகப்படுத்தி திட்ட சாலை அமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.79 (பழைய வார்டு எண்.52)-ல் கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.(17)-ல் 60 அடி அகல திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டு, அச்சாலை தடாகம் சாலை, பொன்னையராஜபுரம், சொக்கம்புதூர் சாலையை இணைக்கும் சாலையாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டச்சாலை முழுமை அடைய 6 சென்ட் இடம் தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின் சாலை அமைக்க ஏதுவாக இருக்கும் என்பதால் மேற்படி T.S.No.7/4346 – குமாரபாளையம் கிராமம் - 6 சென்ட் நிலப்பரப்பை நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது. இச்சாலைப்பகுதி நகர நில அளவை அலுவலகத்தில் திட்டச்சாலை என குறிப்பிடப்பட்டுள்ள பூமியினாது தனியார் வசம் பட்டா நிலமாக உள்ளதால் மாவட்ட வருவாய் அலுவலரால் ஆய்வு செய்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடித எண்.27143/2010/ஊ3 நாள்.16.02.2012-ன்படி மேற்படி 6 சென்ட் பூமி தனியார் இடம் என நகர நில அளவை அலுவலகத்தில் திருத்தம் செய்ய உத்திரவு வழங்கியுள்ளார். அதன்படி திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டச் சாலையின் மொத்த நீளம் 458 மீட்டராகும். இதில் 115 அடி நீளத்தில் இடத்தின் பரப்பளவு 6 சென்ட் இடத்திற்கு மட்டும் சாலையின் பயன்பாட்டிற்கு வராமல் உள்ளது. இந்த நிலத்தினை கையகம் செய்தால் திட்டச்சாலை முழுவதும் பயன்பாட்டிற்கு வரும்.

எனவே, மேற்படி 6 சென்ட் நிலப்பரப்பை திட்டச்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்ய நடப்பு வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஒரு சதுரடிக்கு ரூ.1400/- வீதம் 2616 சதுரடிக்கு (6 சென்ட்) நில ஆர்ஜிதம் செய்ய ஆகும் தொகையாக ரூ.36,62,400/- மற்றும் பதிவுக்கட்டணமும் சேர்த்து மொத்தம் ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) ஆகும். மேற்படி நிலத்திற்கு நில உரிமையாளர்கள் தனிப்பட்ட பேச்சு வார்த்தை மூலம் மாவட்ட நிர்வாகம் நிர்ணயிக்கும் தொகையை பெற்றுக் கொள்ள சம்மத கடிதம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்துள்ளனர். எனவே மாவட்ட நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் நில உரிமைத் தொகையினை நில உரிமையாளர்களுக்கு வழங்கவும், அதற்காகும் செலவுத் தொகையினை உள்ளூர் திட்டக் குழுமத்திலிருந்து பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.12509/2011/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 151 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண்.37 – விளாங்குறிச்சி கிராமம், விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8, 60 அடி அகல திட்டச்சாலை BB மறு வரையறை உத்தேசம் - கொடிசியா திட்டச்சாலை XX 60 அடி அகலம் மற்றும் 80 அடி அகல A1A1 (Vilankurichi DD Plan – 8) திட்டச்சாலை இணைத்தல் - உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அணுகு சாலை உருவாக்கம் - தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, சத்தியமங்கலம் சாலையில் தற்போது இயங்கி வரும் ஆம்னி பேருந்து நிலையத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்களுக்கு பெருத்த இடையூறுகள் ஏற்பட்டு வருகிறது. இதற்கு மாற்று ஏற்பாடாக கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் கொடிசியா வளாகம் அருகில் 11.17 ஏக்கர் பரப்பளவில் உத்தேசித்து அரசின் அனுமதி கோரும் நடவடிக்கையில் உள்ளது. அவினாசி சாலையிலிருந்து கொடிசியா வளாகத்திற்கு செல்லும் XX 60 அடி அகல திட்டச்சாலை உருவாக்கப்பட்டுள்ளது.

கொடிசியா பகுதியின் மேற்கு பகுதியில் கீதாஞ்சலி பள்ளி அருகில் விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8-ல் 60 அடி அகல BB திட்டச்சாலை உள்ளது. இத்திட்டச்சாலை முழுவதும் தனியாரிடம் நில ஆர்ஜிதம் செய்து A1A1 80 அடி அகல திட்டச்சாலையும் (கிழமேல் NRI லேஅவுட் திட்டச்சாலை) மற்றும் கொடிசியா வளாக அணுகுசாலை XX 60 அடி நிலையில் உள்ள சாலைகளை இணைப்பதாக உள்ளது.

உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் 11.17 ஏக்கர் நிலப் பரப்பு, A1A1 80 அடி அகல திட்டச்சாலைக்கும், XX 60 அடி சாலை திட்டச்சாலைக்கும் இடையில் முறையான அணுகு சாலையின்றி உள்ளது. கீதாஞ்சலி பள்ளி அருகில் தற்போதைய விரிவு அபிவிருத்தி திட்டத்தின் வரையறையின்படி உள்ள BB 60 அடி அகல திட்டச்சாலையினை மாற்றம் செய்து உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் அமையும் 11.17 ஏக்கர் நிலப்பரப்பின் மேற்கு எல்லையினை ஒட்டி தென்வடலாக 80 அடி அகலமாக விரிவுபடுத்தி கொடிசியா முன்புறம் உள்ள திட்டச்சாலையினையும் (XX திட்டச்சாலை) 80 அடி அகல A1A1 NRI லே அவுட் திட்டச்சாலையினையும் இணைப்பு செய்தால் உத்தேச ஆம்னி பேருந்து நிலையத்திற்கு முறையான அணுகு பாதை கிடைக்கப் பெற்று ஆம்னி பேருந்துகள் அவினாசி சாலையிலிருந்து உள்ளே நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் ஏற்றதாக இருக்கும்.

இந்த மறுவரையறை இணைப்பு சாலையின் மூலம் அவினாசி சாலையிலிருந்து வடக்கு நோக்கி அனைத்து போக்குவரத்துக்களும் சேரன் மாநகர், விளாங்குறிச்சி, காளப்பட்டி, சரவணம்பட்டி ஆகியவற்றை கடந்து சத்தி சாலை செல்வதற்கு போதுமான போக்குவரத்து வசதி ஏற்படுவதுடன். நகரினுள் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரிபடுத்தலாம்.

எனவே, தற்சமயம், அங்கீகரிக்கப்பட்ட விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8-ல் BB 60 அடி அகலம் என வரையறை செய்யப்பட்டுள்ள இணைப்பு சாலையினை மறுவரையறை செய்து உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் 11.17 ஏக்கர் பரப்பளவில் மேற்கு எல்லையினை ஒட்டி 80 அடி அகல அளவில் திட்டச்சாலை மறுவரையறை செய்து உத்தேச ஆம்னி பேருந்து நிலையத்திற்கு அணுகு பாதை ஏற்படுத்துவதுடன் அவினாசி சாலை, சத்தி சாலை இணைப்பினை எளிமைப்படுத்தலாம்.

BB 60 அடி அகல திட்டச்சாலையினை ஒட்டி எவ்விதமான அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இடம் முழுவதும் காலியாக தனியார் வசம் உள்ளது. தற்போது BB 60 அடி அகல திட்டச்சாலையை 80 அடி அகலமாக மாற்றி அமைக்கப்பட உள்ள இடமும் எவ்வித அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படாமல் தனியார் காலியிடமாக உள்ளது. உத்தேச திட்டச்சாலை மறுவரையறையின்படி அமையப்பெறும் நிலங்களின் விபரம் மற்றும் புல எண்கள் கீழ்வருமாறு.

| வ.எண். | கிராமம் | புல எண் |
|---|---|---|
| 1. | விளாங்குறிச்சி | 384/1 |
| 2. | விளாங்குறிச்சி | 385 |
| 3. | விளாங்குறிச்சி | 390 |
| 4. | விளாங்குறிச்சி | 391 |
| 5. | விளாங்குறிச்சி | 395/1 |
| 6. | விளாங்குறிச்சி | 395/3 |
| 7. | விளாங்குறிச்சி | 397 |

இப்பிரேரணைக்கு உள்ளூர் திட்டக் குழுமம் வழியாக நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது. பொதுமக்கள் நலன் கருதி உத்தேச ஆம்னி பேருந்து நிலையத்திற்கு அணுகு பாதை உருவாக்கம் செய்யவும், அவினாசி சாலை, சக்தி சாலை இணைப்பினை எளிமைப்படுத்தவும் (BB திட்டச்சாலை – விளாங்குறிச்சி அபிவிருத்தி திட்டம் எண்.8) இத்திட்டச்சாலை மறுவரையறை செய்து சாலையின் அகலத்தை 60 அடியிலிருந்து 80 அடியாக மாற்றி அனுமதி கோரும் பிரேரணையினை நகர் ஊரமைப்பு ஆணையரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- விளாங்குறிச்சி கிராமம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8-ல் உள்ள 60 அடி அகல BB திட்டச்சாலையை 80 அடி அகல திட்ட சாலையாக மாற்றி உத்தேச ஆம்னி பேருந்து நிலையம் இடத்தின் மேற்குபுறத்தில் சாலையின் அமைப்பை மாற்றவும் நிலம் கையகம் செய்வதற்கு தேவைப்படும் நிதியினை உள்ளூர் திட்டக் குழும நிதி அல்லது உள்கட்டமைப்பு நிதியிலிருந்து பெற நகர் ஊரமைப்பு துறை ஆணையரை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கலாம்.

ந.க.எண். 8714 /2012/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 152 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

### பொருள் எண் 8

பொருள் - பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்பு தூய்மைக்குழு – தொடர்பாக.

----------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 100 வார்டுகளிலும் சாலையோரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், வார்டின் உட்புற பகுதிகளில் அப்புறப்படுத்தாமல் தேங்கிகிடக்கும் குப்பை கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை அகற்றவும் நீண்ட நாட்களாக சுத்தம் செய்யப்படாமல் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் ஏதுவாக தூய்மைக்குழுவிற்கு 30 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 1 வருட காலத்திற்கு பணி அமர்த்த ரூ.24.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி தீர்மான எண். 1. நாள். 27.04.2012ம் தேதி பெறப்பட்டது.

மேற்படி பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.மயில்வாணன் 4.05% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளி திறனாய்வு கூட்டத்தால் 12.07.2012 அன்று ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு தூய்மைக்குழு பணியானது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களால் 13.07.2012 அன்று துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திரு.மயில்வாணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று 13.07.2012 அன்று வழங்கப்பட்ட ஆணைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - பின்னேற்பு வழங்கலாம் எண். 3570/2012/ எம். இ. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 153 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பிற்கு பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மைய வளாகத்தில் உள்ள விடுதிக்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 12/07/2012 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண். | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப்புள் ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **11610/2011/ எம்.டி.4** | தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மைய வளாகத்தில் உள்ள விடுதிக்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | **75.00** | **05/07/2012** | **1.**தி/ள் கே.எ.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் **1.81%** அதிகம்<br>**2.**தி/ள்ஆர்.கே.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் **0.46%** குறைவு | தி/ள்ஆர்.கே.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் **0.46%** குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. மேற்கண்ட பணி மாமன்றத்தின் அனுமதி வரம்பிற்குள் வருவதால் இப்பணிக்கு பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11610/2011/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 154 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தி/ள்.ELCOT நிறுவனத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு 1.20 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது – மேற்படி பில்லூர் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கவும், ராமகிருஷ்ணாபுரத்திலுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள முதன்மை பிரதான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் வடிவமைத்து கொண்டு செல்லவும், அதற்கான பணிகளை மாநகராட்சியால் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டுவது – தொடர்பு.

பார்வை :
1. முதன்மை தலைமைச் செயலாளர் மற்றும் தலைவர், TIDEL பூங்கா, கோயம்புத்தூர் அவர்களது நேர்முக கடிதம்.எண். TPCL/WS/2012 நாள்.18.01.2012
2. மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர் மின்னாளுமை (E-Governance) தி/ள் ELCOT நிறுவனம், சென்னை அவர்களது நேர்முக கடித எண்.ELCT/CBE-IT PARK/TWAD/2008 நாள்.15.02.2012

– – – – – – –

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்றான விளாங்குறிச்சியிலுள்ள தி/ள்.ELCOT நிறுவனத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு (IT SEZ) 1.20 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து வழங்குவதற்கான குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் இதர செலவினங்களை மேற்படி நிறுவனத்தால் செலவு செய்யப்படும் எனவும், தற்போதைய தேவையான குறைந்த அளவு 0.30 மில்லியன் லிட்டர் குடிநீர் உடனடியாக வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் விரிவான திட்ட அறிக்கை அனுப்பி வைக்குமாறு பார்வை 2-ல் கண்ட மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர் மின்னாளுமை(E-Governance) அவர்களது கடிதத்தில் மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி நிறுவனத்திற்கு அதிகபட்ச அளவு 1.2 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து தி/ள்.ELCOT நிறுவனத்தாரின் சொந்த செலவில் கோயம்புத்தூர் மாநகராட்சியால் பகிர்மானக் குழாய்கள் வடிவமைத்து கொண்டு செல்ல அதற்கான மதிப்பீடு ரூ. 192.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நிர்ணயிக்கும் சதவீதம் சென்டேஜ் தொகையாக மாநகராட்சிக்கு செலுத்தவும், பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முதன்மை நீர் தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மான குழாய்கள் வடிவமைத்து விளாங்குறிச்சியிலுள்ள தி/ள்.ELCOT நிறுவனத்தின் சிறப்பு பொருளாதார மண்டல தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (IT SEZ) குடிநீர் குழாய் கொண்டு செல்லவும், அதற்கான பணியை டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்நிறுவனத்திற்கு கோவை மாநகராட்சியிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் தற்போதைய தேவையான 0.30 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திலிருந்து வழங்கவும் அதற்கான பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. தி/ள்.ELCOT நிறுவனத்தின் அதிகபட்ச குடிநீர் அளவான 1.2 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து குடிநீர் குழாய் வடிவமைத்து குழாய்கள் கொண்டு செல்லும் பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சியால் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மேற்படி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நிர்ணயிக்கும சதவீதம் சென்டேஜ் தொகையாக மாநகராட்சிக்கு செலுத்தவும், மதிப்பீட்டு தொகை ரூ.192.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழிற்நுட்ப அனுமதிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தி/எ்.ELCOT நிறுவனத்திற்கு தற்போதைய தேவையான குறைந்த அளவு 0.30 மில்லியன் லிட்டர் குடிநீர் பில்லூர் இரண்டாவது திட்டத்திலிருந்து வழங்கவும் அதற்கான பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1987/2010/ப.வ.எம்

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 155 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2க்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தின்(IUDM)கீழ் 2012-13ம் ஆண்டிற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் – நகராட்சி நிர்வாக ஆணையரக நிர்வாக அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி கோருதல்.

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில், தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்(IUDM)கீழ் 2012-13ம் ஆண்டிற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.20 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சிப் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் IUDM திட்டத்தின்கீழ் 2012-13ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட இடங்களில் சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் விபரம் | சாலையின் நீளம் கிலோ மீட்டரில் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 1 | நஞ்சப்பகவுண்டர் வீதி மற்றும் சேரன் காலனி பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.75 | 14.00 |
| 2 | 2 | விஸ்வநாதபுரம் முதல் தெருவில் சாலை அபிவிருத்தி பணிகள் செய்தல் | 0.60 | 46.00 |
| 3 | 2 | சக்தி நகர் மற்றும் பாலாஜி நகர் பகுதிகளில் சாலை அபிவிருத்தி பணிகள் செய்தல் | 0.825 | 22.50 |
| 4 | 3 | காந்தி நகர் மற்றும் பாலாஜி நகர் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.56 | 12.50 |
| 5 | 3 | ஆசிரியர் காலனி, பாலசுப்ரமணியா நகர் மற்றும் சுப்ரமணியம்பாளைம் பழைய ஊர் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.30 | 15.00 |
| 6 | 4 | அப்பநாயக்கன்பாளையம், கே.என்.ஜி.புதூர் மற்றும் அர்ஜூனா நகர் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.73 | 26.10 |
| 7 | 26 | வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதி II பிரதான சாலையில் சாலை அபிவிருத்தி பணிகள் செய்தல் | 3.21 | 74.90 |
| 8 | 26 | கருப்பராயன் கோவில் முதல் மாசாணியம்மன் நகர் வரை சாலை அபிவிருத்தி பணிகள் செய்தல் | 0.85 | 45.20 |
| 9 | 26 | ருக்குமணி நகர் முதல் மாநகராட்சி எல்லை முடிய சாலை அபிவிருத்தி பணிகள் செய்தல் | 0.71 | 48.30 |
| 10 | 27 | அபிராமி நகர், ரங்கா நகர், முருகன் புரம், அம்பிகை நகர், சுந்தரபுரி நகர் திட்ட சாலை, பாக்கியம் லேஅவுட், ஜோதி லேஅவுட் மற்றும் சிந்து நகர் சாலைப் பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 2.14 | 48.90 |
| 11 | 28 | ஜி.கே.எஸ் நகர் பிரதான சாலைப் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.45 | 31.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 28 | ராமநாத நகர், நமசிவாய நகர், எஸ்.பி.எஸ் நகர் மற்றும் ஜி.கே.எஸ் நகர் உள் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.97 | 49.90 |
| 13 | 42 | அத்திபாளையம் பிரதான சாலை (ஆப்பிள் நிறுவனம் அருகில்) பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 0.50 | 43.35 |
| 14 | 29 | மடாலயம் சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.03 | 26.10 |
| 15 | 32 | வி.கே.மெயின் ரோடு, பால்கார தோட்டம் பஸ் ஸ்டாப் முதல் சிவராமன் நகர் மற்றும் ஆசிரியர் காலனி வரை தார்த்தளம் அமைத்தல் | 1.410 | 37.70 |
| 16 | 32 | வி.கே ரோடு முதல் வெங்கடாசலபதி நகர், டிபிஎப் பவுண்டரி முதல் ராஜூ நாயுடு வெங்கடாசலபதி நகர் மற்றும் குமரன் மெயின் ரோடு வீரா டிபார்ட்மெண்ட் முதல் பிஆர்கே கார்டன் வரை தார்த்தளம் அமைத்தல் | 1.423 | 38.25 |
| 17 | 32 | செங்காளியப்பன் நகர் வி.கே.மெயின் ரோடு முதல் கொடிசியா ரோடு வரை தார்த்தளம் அமைத்தல் | 1.210 | 60.00 |
| 18 | 32 | இன்கம்டேக்ஸ் காலனி ரோடு டெக்ஸ்டூல் மெயின் ரோடு முதல் வி.கே ரோடு வரை தார்த்தளம் அமைத்தல் | 0.650 | 18.00 |
| 19 | 32 | பல்லவி நகர் மற்றும் சிவானந்தா மில் ரோடு முதல் சரவணம்பட்டி ரோடு வரை தார்த்தளம் அமைத்தல் | 2.100 | 45.10 |
| 20 | 32 | கோஆப்ரேடிவ் (பீளமேடு ஒர்க் இண்டஸ்ட்ரியல்) பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 0.540 | 14.50 |
| 21 | 32 | தனலட்சுமி நகர் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 0.670 | 16.00 |
| 22 | 34 | இளங்கோ நகர்ப் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 3.270 | 50.00 |
| 23 | 34 | திருமுருகன் நகர்ப் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.485 | 10.50 |
| 24 | 35 | விவேகானந்தா பள்ளி சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.910 | 19.75 |
| 25 | 35 | பி.எல்.எஸ் நகர்ப் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.040 | 30.00 |
| 26 | 36 | மதுசூதனன் நகர்ப் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.506 | 11.50 |
| 27 | 6 | ராஜப்பா நகர் பிரதான சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.955 | 27.00 |
| 28 | 6 | வள்ளி நகர் மெயின் ரோடு மற்றும் ராமகிருஷ்ணா நகர் தொடர்ச்சி பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.178 | 22.50 |
| 29 | 7 | சர்ச் வீதி, விவேகானந்தர் வீதி, அண்ணா நகர் கிழக்கு தொடர்ச்சி மற்றும் எம்.ஜி.ஆர் காலனி பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.91 | 32.00 |
| 30 | 8 | சக்தி நகர் பிரதான சாலை, இந்திரா நகர் தொடர்ச்சி சாலை மற்றும் பாலாஜி கார்டன் பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.622 | 32.50 |
| 31 | 9 | குமரன் மண்டபம் ரோடு மற்றும் பிரபு நகர் ரோடு முதல் புதுப்பாலம் செட்டியாரம்மா காடு வீதி வரை பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.100 | 25.00 |
| 32 | 17 | மருதமலை ரோடு முதல் ஐஓபி காலனி வரை உள்ள சாலைகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 2.875 | 70.00 |
| 33 | 17 | நவாவூர் ரோடு பள்ளம் முதல் தொண்டாமுத்தூர் ரோடு வரை உள்ள சாலைகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.96 | 48.00 |
| 34 | 17 | சின்னசாமி கவுண்டர் வீதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.91 | 22.50 |
| 35 | 18 | வேம்பு அவென்யூ, அலமேலு மங்கை அவென்யூ, விமல் நகர் மற்றும் ஓம் கணேஷ் நகர்ப் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 5.28 | 74.95 |
| 36 | 87 | குறிஞ்சி நகர்ப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 2.00 | 75.00 |
| 37 | 87 | வசந்தம் நகர்ப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 2.00 | 75.00 |
| 38 | 88 | ராஜாஜி நகர்ப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 0.75 | 36.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39 | 90 | பரிபூர்ணா எஸ்டேட் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் | 1.50 | 72.00 |
| 40 | 90 | சிறுவாணி நகர் தொடர்ச்சி ஆல்பா நகர் முதல் ஐஸ்வர்யா நகர் வரை தார்த்தளம் அமைத்தல் | 1.42 | 68.00 |
| 41 | 91 | கே.பி.ஆர் காலனி முதல் பாலக்காடு மெயின் ரோடு வரை தார்த்தளம் அமைத்தல். | 1.50 | 72.00 |
| 42 | 92 | பி.கே.புதூர் ரோடு பகுதியில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.00 | 47.00 |
| 43 | 92 | பெருமாள் சாமி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலைகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.00 | 41.00 |
| 44 | 93 | நிர்மல் மாதா பள்ளி சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.40 | 68.00 |
| 45 | 94 | அம்மனியம்மாள் லேஅவுட் மற்றும் குறுக்கு சாலைகள், செங்கப்ப கோணார் வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 1.30 | 26.00 |
| 46 | 95 | பாரதி நகர் மற்றும் குறுக்கு சாலைப் பகுதிகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 2.00 | 45.00 |
| 47 | 96 | ஆண்டாள் தோட்டம் மற்றும் குறுக்கு சாலை கருணாநிதி நகர் மற்றும் குறுக்கு சாலைகளில் தார்த்தளம் புதுப்பித்தல் | 2.00 | 21.50 |
| 48 | 98 | பஞ்சாயத்து ஆபிஸ் அலுவலக பிரதான சாலையில் தார்த்தளம் புதுப்பித்தல் | 0.42 | 19.00 |
| 49 | 99 | அற்புதம் நகர் மற்றும் ராகவேந்திரா கார்டன் பகுதிகளில் தார்த்தளம் அமைத்தல் | 0.77 | 49.00 |
| 50 | 100 | வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதி II பவர் ரோடு முதல் மெயின் ரோடு பஸ் ஸ்டேண்ட் வரை தார்த்தளம் புதுப்பித்தல் | 0.64 | 40.00 |
| 51 | 89 | சுண்டக்காமுத்தூர் மெயின் ரோடு முதல் அண்ணா நகர் வரை தார்த்தளம் அமைத்தல் | 0.75 | 36.00 |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1623/2012/MD2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 156 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி, தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான 75 லட்சம் - 25% சதவீத கூடுதல் தொகைக்கு – பணி மேற்கொள்ள அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சிகுட்பட்ட 100வார்டுகளில் உள்ள குடிசைப் பகுதிகள், அழுத்தம் குறைவுள்ள பகுதி, மேடான பகுதிகளில் குடிநீர் கசிவு/பராமரிப்பு பணியின் போது குடிநீர்விநியோக தடை ஏற்படும் பகுதிகள், நெடுஞ்சாலைத் துறை சாலை அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை கால மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை தவிர அன்றாட பெறப்படும் குடிநீர் சம்பந்தமாக புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1) பாரதிபூங்கா 2) புலியகுளம் 3) வரதராஜபுரம் 4)MSR மற்றும் 5) சாரதாமில்(சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் உள்ள குடிநீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு கூடுதல் தனியார் டேங்கர் லாரிகள் பயன்படுத்தப்பட்டு ஒப்பந்தத்தொகை முடிவடையவுள்ளதால் புதியதாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தவிர மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு மாமன்றத்தில் அனுமதி பெற காலதாமதம் ஏற்படும் காரணத்தாலும் குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்குவது, கருத்தில் கொண்டு தற்பொழுது நடைமுறையில் உள்ள விலைவிகிதப்படியே மதிப்பீட்டுத் தொகை 75லட்சத்தில் 25% தொகையையான ரூ.18,75,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் ஜி.சசிக்குமார் ஒப்பந்ததாரர் மூலமே பணி தொடர்ந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.எண். 11555/2012/எம்.டி2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 157 நாள் : 30.07.2012</u>

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது. மேலும் வார்டு பகுதிகளில் எங்கெங்கு அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் ஆழ்துளை கிணறு அமைத்து மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பொதுப்பணித்துறை பராமரிப்பில் இருந்த கீழ்க்கண்ட (8) எட்டு நீர்நிலைகளிலும் குடியிருப்பு ஆக்கிரமிப்புகள் அதிகளவில் உருவாகிவிட்டதாலும், நீண்ட காலமாக நீர்நிலைகள் தகுந்த பராமரிப்பின்றி இருந்து வந்ததால், நீர்நிலைகளின் கரைகள் முட்புதர்கள் படர்ந்து, கரைகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் எட்டு நீர்நிலைகளையும் முழுமையாக தூர்வாரி, கரைகளை மேம்படுத்தி நீர்நிலைகளில் சேரும் கழிவுநீரினை சுத்தப்படுத்தி நீர்நிலைகளில் விடவும், மழைகாலங்களில் பெறப்படும் மழைநீரினை நீர்நிலைகளில் சேமித்து நிலத்தடி நீரினை அதிகரிக்கும் வகையில் நீர்நிலைகளை புனரமைத்து சீரமைக்கும் பணியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான திரு. ஆப்ரோ, பெங்களூர் என்ற நிறுவனம் மூலமாக தயாரிக்கப்பட்டது.

1. நரசம்பதி குளம்
2. கிருஷ்ணம்பதி குளம்
3. செல்வம்பதி குளம்
4. குமாரசாமி / முத்தண்ணன் குளம்
5. செல்வ சிந்தாமணி குளம்
6. பெரிய குளம்
7. வாலாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

இப்பணியினை மத்திய, மாநில அரசு மானிய நிதி உதவியுடன் மாநகராட்சி பங்கு நிதியும் செலவழித்து பணியினை மேற்கொள்ள இருப்பதால், பொதுப்பணித்துறை வசம் உள்ள மேற்படி நீர்நிலைகளை மாநகராட்சி வசம் ஒரு குளத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 100 வீதம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குளத்தினை ஒப்படைக்க அரசு ஆணை எண். 257, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 29.12.2009—ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சி பகுதிகளில் உள்ள மேற்கண்ட 8(எட்டு) நீர்நிலைகளை சுற்றுப்புற சூழல் மற்றும் நீர்வளங்களின் இயற்கை தன்மை மாறாமல் நீர்நிலைகளை தூர்வாரி, கரைகளை பலப்படுத்துவதன் மூலம் நீர்த்தேக்கும் திறனை அதிகரித்தல், நீர் நிலைகளின் கரைகளில் நடைபாதைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு புனரமைக்கும் பணிக்காக ரூ. 200.00 கோடி மதிப்பில் (2012—2013—ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி) தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்டஅறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை மற்றும் தமிழ்நாடு நகர்புர மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO), சென்னை மூலமாக மத்திய நகர்புர வளர்ச்சித் துறையின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

அ) மாநகராட்சி பகுதிகளில் உள்ள 8(எட்டு) நீர்நிலைகளை சுற்றுப்புற சூழல் மற்றும் நீர்வளங்களின் இயற்கை தன்மை மாறாமல் நீர்நிலைகளை தூர்வாரி, கரைகளை பலப்படுத்துவதன் மூலம் நீர்த்தேக்கும் திறனை அதிகரித்தல், நீர் நிலைகளின் கரைகளில் நடைபாதைகள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு நீர்நிலைகளை புனரமைக்கும் பணிக்காக ரூ. 200.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்டஅறிக்கையினை மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று, மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்படவுள்ள **"ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம்—II "**ன் கீழ் மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி திட்டப்பணிக்கு மத்திய அரசின் மானிய நிதி ரூ. **100.00** கோடி மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ரூ. **40.00** கோடி தவிர மாநகராட்சியின் பங்குத்தொகையான ரூ. **60.00** கோடி தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்றோ திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: **13090/06**/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 158 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆவிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : நிர்வாகம் - கோயம்புத்தூர் மாநகராட்சி கல்விப்பிரிவு பணியாளர்களுக்கு பணியிடங்கள் தரம் உயர்த்தப்பட்டு பதவி உயர்வு வழங்கக் கோரியது – அரசுக்கு அனுப்பி அனுமதி பெற மன்ற அனுமதி கோருவது – சார்பாக.

--------------------

மாநகராட்சி கல்விப்பிரிவு மற்றும் பள்ளி ஆசிரியரல்லாத பணியாளர்கள் தமது 15.06.2012-ம் நாளிட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 16 மேல்நிலை, 10 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 56 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் 897 ஆசிரியர்கள், 142 ஆசிரியரல்லாத பணியாளர்கள் மற்றும் 177 சத்துணவு மையப்பணியாளர்கள் ஆகியோர்களின் நிர்வாகப்பணிகளை கல்விப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்கென 2 உதவியாளர் பணியிடங்களும் 8 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களும் ( பள்ளிக்கென அனுமதிக்கப்பட்ட பதிவறை எழுத்தர்களில் 2 பணியிடங்களை இப்பிரிவிற்கென மாற்றப்பட்டுள்ளது ). 2 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களும் அரசாணை எண் 538 பள்ளிக் கல்வித்துறை நாள் 12.04.1990-ன்படி அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், அரசாணை எண் 595 நிதித்துறை (ஊ.பி) நாள் 01.08.1992-ன்படி மாநகராட்சி இதரப்பிரிவுகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்கள் தகுதி உயர்த்தப்பட்டனர் எனவும் ஆனால் கல்விப்பிரிவு மற்றும் பள்ளியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்கள் பணியிடங்கள் தகுதி உயர்த்தப்படவில்லை எனவும், மேலும், அரசாணை எண். 505 பள்ளிக் கல்வித்துறை நாள் 21.05.1993-ன்படி தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் கீழ் பணியாற்றும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் 1993 மற்றும் 1994-ம் ஆண்டுகளில் தகுதி உயர்த்தப்பட்டபோதும், இம்மாநகராட்சி பள்ளிகள் மற்றும் கல்விப்பிரிவு இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் தகுதி உயர்த்தப் படவில்லை எனவும் தெரிவித்து, அரசாணை எண். 131 பள்ளிக் கல்வித்துறை நாள் 01.02.1981ன் படி மாநகராட்சி ஆணையாளர் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த கல்விப்பிரிவு மற்றும் பள்ளிகளில் இவ்விரு அரசாணைகளும் அமுல்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே தங்களுக்கும் அரசாணை எண்.595 நிதி (ஊ.பி) துறை நாள் 01.08.1992-ன்படியும் மற்றும் அரசாணை எண். 505 பள்ளிக் கல்வித்துறை நாள் 21.05.1993-ன் படியும் உரிய விகிதாச்சார அடிப்படையில் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் முறையே கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தி பதவி உயர்வு வழங்கக் கோரியுள்ளனர்.

அரசாணை எண். 595 நிதி (ஊ.பி.) துறை நாள் 01.08.1992-ன்படி அமைச்சுப்பணியாளர்களுக்கான பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்த இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை முறையே உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்களாக தகுதி உயர்த்த (Upgrade) கீழ்கண்டவாறு வழிமுறைகள் வகுக்கப்பட்டள்ளன.

(i) இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்கள் (Dealing hands) 5 பேருக்கு ஒரு கண்காணிப்பாளர்.

(ii) இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்கள் விகிதாச்சாரம் சீராக 1:2 என, அதாவது 2 உதவியாளருக்கு 1 இளநிலை உதவியாளர் எனும் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

மேலும், எந்தெந்த துறைகளில் பணியாளர் விகிதாச்சாரம் மேற்படி எண்ணிக்கைக்கு குறைவாக உள்ளதோ அவ்விடங்களில் மேலே தெரிவிக்கப்பட்டபடி உதவியாளர் பணியிடங்கள் கண்காணிப்பாளர் பணியிடங்களாகவும், இளநிலை உதவியாளர் பணியிடங்கள் உதவியாளர் பணியிடங்களாக தகுதி உயர்த்தப்பட வேண்டும். மேலும், பணியாளர் எண்ணிக்கை 100-க்கும் குறைவாக உள்ள இனங்களில் அலுவலக நிர்வாகப் பணிகளுக்காக அலுவலக மேலாளர் பணியிடம் ஒன்றும் வழங்கலாம்.

மேற்படி வழிகாட்டுதல்கள்படி தேவையான எண்ணிக்கையிலான இளநிலை உதவியாளர் பணியிடங்களை உதவியாளர் பணியிடங்களாகவும், உதவியாளர் பணியிடங்களை கண்காணிப்பாளர் பணியிடங்களாகவும் தரம் உயர்த்தியும் மற்றும் நிர்வாக அலுவலர் நிலையிலான பணியிடங்களை தோற்றுவித்தும் பதவி உயர்வு வழங்கும் பணிகளை 1992-93 மற்றும் 1993-94-ம் ஆண்டுக்குள் முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை எண்.505 பள்ளிக் கல்வித்துறை நாள் 21.05.1993-ல் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் கீழ் வரும் 2925 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 812 உதவியாளர் பணியிடங்கள் முறையே உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், மாநகராட்சி கல்விப்பிரிவிற்கென அரசாணை எண்.538 பள்ளிக் கல்வித்துறை நாள் 12.04.1990–ன்படி அங்கீகரிக்கப்பட்ட 8 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 2 உதவியாளர் பணியிடங்கள் உட்பட பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட 34 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் எவையும் தரம் உயர்த்தப்படவில்லை.

தற்போது கல்விப்பிரிவு மற்றும் பள்ளிகள் ஒரே அலகாக கருதப்படுவதாலும், இங்கு பணிபுரியும் இளநிலை உதவியாளர்களுக்கு ஒரே பணிமூப்புப் பட்டியல் பேணப்பட்டு வருகிறது. எனவே, கல்விப்பிரிவில் உள்ள 8 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மற்றும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 34 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்கள் என மொத்தம் 42 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் உள்ளன.

எனவே, அரசாணை எண்.595 நிதி (ஊ.பி) துறை நாள் 01.08.1992-ன்படி

(i) மாநகராட்சி கல்விப்பிரிவில் உள்ள 2 உதவியாளர் பணியிடங்களை கண்காணிப்பாளர் பணியிடங்களாகவும்,
(ii) 42 இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 1:2 என்ற இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் விகிதாச்சாரத்தின்படி 14 பணியிடங்கள் இளநிலை உதவியாளர் பணியிடங்களாகவே வைத்துக் கொண்டு ) 28 இளநிலை உதவியாளர் பணியிடங்களை உதவியாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட வேண்டும்.

தரம் உயர்த்தப்படும் 28 உதவியாளர் பணியிடங்களை 10 பணியிடங்களை கல்விப்பிரிவிற்கும், 18 பணியிடங்களை 16 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வழங்கலாம்.

மேலும், மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் எண்ணிக்கை 142 மற்றும் சத்துணவுப் பணியாளர்கள் 177 பேர்கள் உள்ளதாலும், மாநகராட்சி பள்ளிகளின் சத்துணவு திட்டத்தினை கவனிக்க கண்காணிப்பாளர் ஒருவரும், கல்விப்பிரிவின் அனைத்து நிர்வாகப் பணிகளை கவனிக்க அரசாணையின்படி குறைந்தபட்சம் ஒரு மேலாளர்/ நிர்வாக அலுவலர் பணியிடம் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு கல்விப்பிரிவின் பணியிடங்களை அரசாணை எண். 595 நிதி (ஊ.பி) துறை நாள் 01.08.1992-ன்படி உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தி பதவி உயர்வு வழங்கவும், கூடுதலாக கண்காணிப்பாளர் மற்றும் நிர்வாக அலுவலர் தலா ஒரு பணியிடங்களை தோற்றுவிக்கவும் அரசின் அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண்.6962/2012/கே14

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 159 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. கே. சந்திரிகா, நகர சுகாதார செவிலியர், இராமநாதபுரம் நகர் நல மையம் நகர் நல மையம் – ஈரோடு மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

——————

கோயம்புத்தூர் மாநகராட்சி, இராமநாதபுரம் நகர் நல மையத்தில் நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. கே. சந்திரிகா அவர்கள் தனக்கு 7 வயதில் ஒரு ஆண் குழந்தையும் 2 வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளதாகவும் தனது கணவர் ஈரோடு மாவட்டத்தில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதால் அவர் ஈரோட்டிலும் இவர் கோயம்புத்தூரிலும் பணிபுரிந்து வருவதால் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்து தனக்கு ஈரோடு மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி. கே. சந்திரிகா, நகர சுகாதார செவிலியரை ஈரோடு மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், ஈரோடு மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண்.6799/12/எம்சி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 160 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பை ஏற்று தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி, தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான 75 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டுவது – தொடர்பாக

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சிகுட்பட்ட 5 மண்டலங்களுக்குட்பட்ட 100வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, மேடான பகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத் துறை சாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலங்களில் மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1) பாரதிபூங்கா 2) புலியகுளம் 3) வரதராஜபுரம் 4)MSR மற்றும் 5) சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு மதிப்பீட்டு ஒப்பந்தத் தொகை முடிவடையவுள்ளதால், மதிப்பீடு ரூ. 75.00- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.எண். 7041/2012/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 161 நாள் : 30.07.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 377.13 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அதில் மூன்று சிப்பப் பணிகள் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணிகளாகும்.

இதில் சிப்பம் II-ல் பணியானதும், மண்டலங்கள் III மற்றும் VI உள்ளடங்கிய சிப்பம் II பணியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கும் பணி ரூ. 57.96 கோடி செலவில் மேற்கொள்ள M/s. SEW-AIPPL (JV), Hyderabad என்ற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் லட்சுமி மில் சந்திப்பில் இருந்து நஞ்சுண்டாபுரம் சாலை வழியாக நஞ்சுண்டாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை மாநில நெடுங்சாலைகளின் ஓரங்களில் கழிவுநீர் குழாய்கள் 1100 மி.மீ. விட்டம் முதல் 1200 மி.மீ. விட்டம் வரையிலான ஆர்.சி.சி. பைப்புகள் 3.52 கி.மீ. நீளத்திற்கு அமைக்க வேண்டியுள்ளது. மாநில நெடுஞ்சாலைகளில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க நெடுஞ்சாலைத்துறை சாலையை வெட்டி குழாய்கள் பதிக்கவும், அதற்கான சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்தவும் கீழ்க்கண்ட விபரப்படி சீரமைப்புக் கட்டணம் செலுத்த கோட்டப் பொறியாளர் (நெ), கோவை தெற்கு அவர்களிடமிருந்து கடந்த 09.05.2012-ல் கேட்பு பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | மாநில நெடுஞ்சாலை விபரம் | மாநகராட்சி செலுத்த வேண்டிய சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | வடகோவை - இராமநாதபுரம் - செட்டிபாளையம் சாலை கி.மீ. 3/430 முதல் 6/950 வரை செட்டி கழிவு நீர் குழாய் பதித்தல் (3.52 கி.மீ. நீளம்) | 1,07,10,000 |

இச்சிப்பப்பணி மதிப்பீடு தொழில்நுட்ப அனுமதி பெறும்போது தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, இரயில்வே கிராஸிங் பகுதியில் கழிவுநீர் குழாய்கள் பதிக்க சாலை சீரமைப்புக் கட்டணமாக ரூ. 5.13 கோடி நிதியினை செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட மாநில நெடுஞ்சாலைகளில் மட்டும் 3.52 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்க சாலை சீரமைப்புக் கட்டண கேட்புத் தொகையான ரூ. 1,07,10,000 (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்)-ஐ மதிப்பீட்டுத் தொகையிலிருந்து செலுத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பாதாள சாக்கடை திட்ட சிப்பம் II பணியான கழிவுநீர் குழாய் அமைக்கும் பணியின் மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் பதிக்க உண்டான சீரமைப்புக் கட்டணம் இதர துறைக்கு செலுத்த ரூ. 5.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் வடகோவை- இராமநாதபுரம் - செட்டிபாளையம் சாலை கி.மீ. 3/430 முதல் 6/950 வரையிலான நெடுஞ்சாலையில் கழிவுநீர் குழாய்கள் பதிக்க பெறப்பட்டுள்ள சாலை சீரமைப்புக் கட்டணமாக கேட்புத் தொகையான ரூ.1,07,10,000 செலுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1468/09/JN4

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் : 162 நாள் : 30.07.2012**</u>

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோவை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சிக்குட்பட்ட 72 வார்டுகள் 112 மழைநீர் வடிகால் மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, மேற்படி பகுதிகளில் சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ரூ. 702.61 கோடி மதிப்பில் மதிப்பீடுகள் கலந்தாலோசக நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மூலம் மத்திய நகர்புற வளர்ச்சி துறையின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்பட்டது.

கடந்த 28.08.2009–ல் நடைபெற்ற ''மத்திய ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு'' கூட்டத்தில், மத்திய அரசிடமிருந்து மேற்படி திட்டநிதி கையிருப்பைக் கருத்தில் கொண்டு மேற்படி மழைநீர் வடிகால் கட்டும் திட்டத்தில் 31 மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் பணிக்காக ரூ. 180.00 கோடி மதிப்பிலான பணிகளுக்கு முதல்கட்டமாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதையடுத்து மேற்படி பகுதிகளில் மட்டும் மழைநீர் வடிகால் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதுதவிர மீதமுள்ள 81 மண்டலங்களில் சாலையோர <u>மழைநீர் வடிகால் கட்டும் பகுதி – II</u> பணிக்கு (Storm Water Drain-Phase-II), பொதுப்பணித்துறையின் 2012–13ம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி திருத்திய மதிப்பிடு ரூ. 490.00 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை மற்றும் தமிழ்நாடு நகர்புர மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO), சென்னை மூலமாக மத்திய நகர்புற வளர்ச்சித்துறையின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மாநகராட்சி எல்லை விரிவாக்கத்திற்கு முந்தைய 72 வார்டுகளில் ஏற்கனவே பணி நடைபெற்று வரும் 31 மண்டலங்கள் தவிர, மீதமுள்ள 81 மண்டலங்களில் சாலையோர <u>மழைநீர் வடிகால் கட்டும் பணி (பகுதி–II)</u> மேற்கொள்ள ரூ. 490.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று, மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்பு <u>திட்டம்-II (JNNURM-II)</u> திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி திட்டப்பணிக்கு மத்திய அரசின் மானிய நிதி ரூ. 245.00 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ரூ. 98 கோடி தவிர மாநகராட்சியின் பங்குத்தொகையான ரூ. 147.00 கோடி தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்றோ திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந. க. எண். 3615 /12/ஜேஎன்4

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் : 163 நாள் : 30.07.2012**</u>

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆவிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

கோவை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சிக்குட்பட்ட 72 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் பணி (பகுதி–I&II) மற்றும் ஐந்து இயற்கை வடிகால்களை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளுக்காக (பகுதி–III) விரிவான திட்ட அறிக்கைகள் கலந்தாலோசக நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் மூலம் மத்திய நகர்புற வளர்ச்சி துறையின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்பட்ட நிலையில், கடந்த 28.08.2009–ல் நடைபெற்ற ''மத்திய ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு'' கூட்டத்தில், மத்திய அரசிடமிருந்த மேற்படி திட்ட நிதிகையிருப்பைக் கருத்தில் கொண்டு, 31 மழைநீர் வடிகால் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ. 180.00 கோடி மதிப்பிலான சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்கு முதல்கட்டமாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 81 மண்டலங்களில் சாலையோர மழைநீர் வடிகால் கட்டும் (பகுதி–II) பணிக்கு (பொதுப்பணித்துறையின் 2012–13ம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையின்படி) திருத்திய மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கை ரூ. 490.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டு மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகரின் மையப்பகுதிகளில் சென்று கொண்டிருக்கும் ஐந்து இயற்கை வடிகால்களிலும், நீண்ட காலமாக தகுந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததால், வடிகால்களின் அடித்தளம் மற்றும் கரைகள் முற்றிலும் சேதமடைந்து, முட்புதர்களால் மூடப்பட்ட நிலையில் உள்ளது. இதனால் மழை காலங்களில் மேற்படி வடிகால்களில் மழைநீர் முறையாக செல்ல இயலாததால், வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, மேற்படி ஐந்து வடிகால்களிலும் சேதமடைந்த அடித்தளம் மற்றும் கரைகளை சீரமைத்து, மேற்படி பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் தளம் (RC Concrete) அமைத்து பலப்படுத்தவும், வடிகால்களின் இருபக்க கரைகளிலும் சாலைகள் மற்றும் சிறு பூங்காக்கள் அமைத்து வடிகால்களை புனரமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு (2012–13 ஆண்டிற்கான பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணைப்படி) மதிப்பீடுகள் தயாரிக்கப்பபட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சங்கனூர் பள்ளம் | – | ரூ. 266.98கோடி |
| 2. | கணபதி – சிங்காநல்லூர் | – | ரூ. 131.65 கோடி |
| 3. | விளாங்குறிச்சி | – | ரூ. 59.70 கோடி |
| 4. | கருப்பராயன் கோவில் | – | ரூ. 18.60 கோடி |
| 5. | கோவில் மேடு | – | ரூ. 23.07 கோடி |
| | மொத்தம் | | ரூ. 500.00 கோடி |

மேற்படி மதிப்பீடுகளுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை மற்றும் தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO), சென்னை மூலமாக மத்திய நகர்புற வளர்ச்சித்துறையின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஐந்து இயற்கை வடிகால்களை புனரமைக்கும் பணிக்கு ரூ. 500.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் பெற்று மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டம்-II (JNNURM-II) திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று திட்டத்தினை செயல்படுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி திட்டப்பணிக்கு மத்திய அரசின் மானிய நிதி ரூ. 250.00 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ரூ. 100 கோடி தவிர மாநகராட்சியின் பங்குத்தொகையான ரூ. 150.00 கோடி தொகையினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்தோ அல்லது அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்றோ திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந. க. எண். 3615/12/ஜேஎன்4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 164 நாள் : 30.07.2012</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆவிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி